1990 மே 12]

காலத்தில் அந்தக் குழுவைக் கலைத்துவிட்டார்கள். இப்போது இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பிறகு அது தேவையில்லை என்ற கருத்தை ஏற்று அமல்படுத்துகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை வருங்காலத்தில் பரிசீலிக்கலாம்.

தஞ்சை மாவட்டத்தில் நேரடி விதைப்பு.

*7070 திரு. ஜி. பழனிச்சாமி :

மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தஞ்சை மாவட்டத்தில் நேரடி விதைப்பின் காரணமாக விவசாய தொழிலாளரின் வேலையின்மைக்கு மாற்று வேலை திட்டம் ஏதேனும் உள்ளதா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) நேரடி விதைப்பின் காரணமாக விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையில்லை என்ற சூழ்நிலை உருவாகாது.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திரு ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரி நதிநீர்ப் பிரச்சினை காரணமாக தஞ்சை மாவட்டத்தில் இருக்கின்ற விவசாயிகள் நேரடியான விதைப்பில் ஈடுபட்டிருக்கின்ற காரணத்தால் அந்த மாவட்டத்தில் இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் 10 இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை இழப்பு காரணமாக மிகவும் கஷ்டத்திற்கு உள்ளாகி இருக்கிறார்கள். எனவே மாற்று வேலைத் திட்டம் ஏதாவது அரசு அறிவித்து அந்தத் தொழிலாளர்களுக்கு வேலை அளிக்க உத்தரவாதம் அளிக்கப்படுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

9-30 மணி

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும் இந்தக் கேள்விக்கும் சம்பந்தம் இல்லையென்றாலும், ஒவ்வொரு ஆண்டும் ஜூன் மாதத்திலே நமக்கு மேட்டூர் அணை திறந்து விடப்பட்டால்தான் தஞ்சை போன்ற நிலப் பகுதிகளில் விவசாய

உற்பத்தி செய்ய வாய்ப்பு உண்டு. ஆனால் கடந்த ஆண்டு 20–8–1989லேதான் மேட்டூர் அணை திறந்து விடப்பட்டது. அதனாலே 71,520 ஹெக்டேர் நிலப்பரப்பில் நேரடி விதை விதைப்பு செய்யப்பட்டது. நேரடி விதை விதைப்பு என்றால் நிலத்தை தரிசாக உழுது மழையின் உதவியால் கிடைக்கும் நீரைக் கொண்டு நெல்லை புழுதிக் காட்டில் விதைப்பதுதான். இதன் காரணமாக, விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையின்மை என்ற சூழ்நிலை உருவாகாது. குறுவைச் சாகுபடி இல்லாத சூழ்நிலையில் நேரடி விதைப்பினால் விவசாயத் தொழிலாளர்களுக்கு விதைப்பு, பயிர்களைக் கவனிப்பது, களை எடுப்பது, மேல் உரமிடுவது மற்ற அறுவடைசெய்வது போன்ற வேலைகள் கிடைக்கும். நேரிடை விதைப்பு இல்லாத சூழ்நிலையில், குறுவைச் சாகுபடி இல்லையென்றால்தான் விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலை கிடைக்காது. விவசாயத் தொழிலாளர்களுக்கு பாதிப்பு இருக்கும். எனவே, மேட்டூர் அணை திறப்பதற்கு ஏற்பட்ட தாமதத்தின் காரணமாக குறுவைப் பயிர் தஞ்சையில் முழுவதுமாகப் பாதிக்கப்பட்டிருக்கும். விவசாயத் தொழிலாளர்களுக்கு முழு அளவு வேலையின்மை ஏற்பட்டிருக்கும். ஆனால் இவ்விலாக்கா மேற்கொண்ட நேரடி விதைப்பின் மூலம் 71,520 ஹெக்டேரில் விவசாயத் தொழிலாளர்களுக்கு போதிய வேலைவாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது.

திரு. ஜி. பழனிச்சாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி விதைப்பு மூலமாக விவசாயிகள் உற்பத்தி அதிகம் எய்தினாலும் கூட விவசாயத் தொழிலாளர்களுக்கு மிகவும் வேலை குறைவு. இதன் மூலமாக இந்த மாவட்டத்தை விட்டு பல்வேறு மாவட்டங்களுக்கு அங்கே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் குடிபெயர்கிறார்கள். அதோடு மட்டுமல்லாமல் கேரளாவிற்கு வேலைக்காக இங்கே இருக்கக்கூடிய இளைஞர்கள் பல்லாயிரக்கணக்கான பேர் செல்கிறார்கள். அப்படிப்பட்ட ஒரு அவல நிலை தஞ்சை மாவட்டத்திலே ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் மாற்று வேலைத் திட்டத்தின் மூலமாக அந்த விவசாயத் தொழிலாளர்களுக்கு வேலையளிப்பதற்கு ஏதாவது ஆறு குளங்களை ஆழப்படுத்துகின்ற திட்டத்தை, மாற்று வேலைத் திட்டத்தை அரசு கொடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே இருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளர்கள் வேலையில்லாத காரணத்தினாலே வேறு மாநிலத்திற்குச் சென்றதாக அரசாங்கத்திற்குத் தகவல் இல்லை.

1990 மே 12]

மாண்புமிகு திரு. கோ. சி. மணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு சாகுபடி ஆரம்பிப்பதற்கு முன்னாலேயே குடிமராமத்துப் பணிகளைத் துவங்குவதற்காக தஞ்சை மாவட்டம் பூராவிலும் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன. எனவே, மாண்புமிகு உறுப்பினர்கள் தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் அதற்கான ஒத்துழைப்பைத் தந்து அந்தப் பணியில் தொழிலாளர்கள் அத்தனை பேரையும் ஈடுபடச்செய்து பல நாட்களுக்கு வேலை வாய்ப்பையும் உருவாக்கி அந்த வாய்க்கால் சீரமைப்புத் திட்டத்தினை உருவாக்க வேண்டும்.

திரு. வி. தம்புசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே விதைப்பு முறை நடைமுறையிலே இருக்கிற காரணத்தினால் வேலை வாய்ப்பு இருக்குமென்று அமைச்சர் அவர்கள் கூறினார்கள். ஆனால் களை எடுப்பு, களை களைதல் இவைகள் பூரா ஒரு 10,15 நாளைக்குத்தான் இருக்குமே தவிர முழு மாதங்களுக்கும் இருக்காது. அவர்கள் பட்டினி கிடக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. குடிமராமத்து வேலை கூட அந்தந்தப் பகுதியிலே வேலை செய்வதால் ஒரு குறைந்த நாளிலே அது முடிந்துவிடும். எனவே அவர்களுக்கு எதிர் காலத்திலே அப்படி வேலையற்ற நிலையிலே நிவாரணம் வழங்குவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலையில்லாத காலங்களில் விவசாயத் தொழிலாளர்களுக்கு எப்படி வேலைவாய்ப்பு அளிக்கலாமென்று மாண்புமிகு உறுப்பினர் தனியாக எழுதித்தருவாரேயானால் பரிசீலிக்கப்படும்.

திருமதி பாப்பா உமாநாத் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்திலே நான் சென்றபோது விவசாயத் தொழிலாளர்கள் பெண்கள் வேலையின்மையைப் பற்றிக் குறிப்பிட்டார்கள் தெளிப்பு முறை, நேரடி பாசன முறையினால். ஆகவே அப்படிப்பட்ட வேலையில்லாத அந்த நாட்களில் மேற்கு வங்கத்தில் நல்ல முறையில் வரவேற்கப்படுவது போல உணவுக்கு வேலைத் திட்டத்தைக் கொண்டு வந்து மற்ற மராமத்து பணியை செய்வதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வீரபாண்டி சோ. ஆறுமுகம் ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் விவசாய உற்பத்திக்குப் போதிய தண்ணீர் மேட்டூர் தண்ணீர் கிடைக்காத காலத்தில், நிலத்தை உழுது அதிலே நாம் விதைப்பு செய்கிறோம். அதன் மூலம் தொடர்ந்து வேலை வாய்ப்பு

கிடைக்கக்கூடும், இன்னும் சொல்லப்போனால் விளைச்சலும் கூடுதலாக கிடைப்பதாக வேளாண்மைத் துறையிலே இருப்பவர்கள தெரிவத்திருக்கிறார்கள். அப்படி விதைத்த பிறகு அந்த நாற்று குவியலாக ஒரே இடத்தில் இருக்குமானால் அதைப் பிரித்து எடுக்கிற பணி, பிறகு களை ஒரு முறைக்கு இரு முறை எடுக்க வேண்டிய பணி அனைத்தும் அந்தத் தொழுலாளர்களுக்கு இப்பொழுது கிடைக்க வாய்ப்பிருக்கிறது. இவைகள் அனைத்தும் அந்தத் தொழிலாளர்களுக்கு இப்போது கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. ஆக வேலை வாய்ப்பு இல்லை என்ற சூழ்நிலை இப்போது இல்லை.

9-35 மணி

ஊத்துக்குழி பள்ளத் திட்டம்.

* 456—திரு. எம். சிரங்கன் :

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) மேட்டூர் வட்டம் வனவாசி மக்களுக்கு குடிநீர் கிடைக்க ஊத்துக்குழி பள்ளத் திட்டம் அரசின் ஆய்வில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், திட்டம் நிறைவேற அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி என்கிற தெய்வசிகாமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

திரு. எம். சிரங்கன் ; மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்தக் கேள்வி நான் சென்ற ஆண்டே போட்டது. மேட்டூர் தொகுதியில் வனவாசிப் பகுதியில் குடிநீர் இல்லாததால் அந்த நேரத்தில் அந்த மக்கள் எல்லாம் ஊரை விட்டுப் போகும்போது, இந்தக் கேள்வியைப் போட்டேன். இபபோது அந்தத் திட்டம் நிறைவேறிவிட்டது. இன்றைகது மக்களும் குடிநீரைக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். சென்ற மாதம் தான் வேளாண்துறை அமைச்சரவர்கள் அதைத் திறந்து வைதது விட்டு வந்தார்சள் என்று சொல்லி, மேலும் இப்படி.......